பக்கங்கள்: நான்கு

STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஒூ ஆவணி மீ 13 உ வியாழக்கிழமை (30-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 09 கதிர்: 180

# முல்லைத்தீவு ராணுவ முகாம் புலிகளிடம் வீழும் நிலையில்!

## காயமுற்ற 42 படையினர் உள்ளே

கொழும்பு, ஆக. 30

முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தொடுத்திருக்கும் கடும் தாக்குதலை அடுத்து, அந்த முகாம் புலிகளிடம் வீழும் நிலையில் இருப்பதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி, ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

படுகாயமுற்ற 42 படையினர் உள்ளே சிக்கிப் போயிருப்பதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

முல்லைத்தீவு முகாமினுள் இராணுவத்தினரும் பொலீஸாருமாக சுமார் 250 பேர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம் மற்றையஇடங்களில் கடும் தாக்குதலில் இறங்கியிருக்கும் இவ்வேளையில் விடுதலைப் புலிகளும் உக்கிரத்தாக்குதலைநடத்தித் தங்கள் பலத்தை நிரூபித்துக் கொண்டுள்ளார்கள் என்றும் –

இது இயற்கையான ஒன்று தான் எனவும் பெயர்கூற விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவம் ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்தித் தாக்குவதால் விடுதலைப் புலிகள் பகலில் தாக்குதல் நடத்தாமல் இரவில் தாக்குதல்களை நடத்துகின்றார்கள் என்றும் -

இதன்காரணமாக இரவில் குறிபார்த்துக் குண்டுவீச இராணுவத்தால் இயலாமற்போகிறது" என்றும் அந்த அதிகாரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படையினரின் சடலங்களை மீட்க முடியாமல் திணறல்

கொழும்பு, ஆக. 30

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் நடத்திவரும் உக்கிரத் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும், காயமடைந்தவர்களையும் முகாமில் இருந்து மீட்டு எடுக்க முடியாது இராணுவத்தினர் திணறுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ முகாமைச் சுற்றி விமானங்களால் குண்டுத் தாக்குதல்களை நடத்தியும் ஹெலிக்கொப்டர்களால் சுட்டும் விடுதலைப் புலிகளின் முற்றுகையை முறியடிக்க முடியாமல் இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தகவல் வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் ஏற்றிச்சென்று உழைக்கும் புதுத்தொழில்

யாழ்ப்பாணம், ஆக. 30

சைக்கிளில் ஏற்றிச் சென்று பணம் உழைக்கும் புதிய தொழில் தற்போது ஆரம்பமாகி விட்டது.

விடத்தல் தீவுக்கும் பூநகரிக்கும் இடையில் தற்போது போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்த 8 மைல் தூரப் பாதையைக் கடக்க பலர் சைக்கிளோட்டிகளின் உதவியை நாடுகின்றனர். ஒருவரை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு போய் விட 100 ரூபாவை சைக்கிள் ஓட்டிகள் கட்டணமாக அறவிடுகிறார்களாம். (இ-3-ரி)

## மட்டக்களப்பில் தாக்குதல்! 9 ஊர்காவலர் பலி!!

மட்டக்களப்பு தம்பலவத்தையில் நேற்று முன் தினம் (செவ்வாய்) விடுதலைப் புலிகள் ஊர்காவல் படையினர் மீது கடும்தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 9 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் நால்வர் காயமடைந்தனர் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## பொதுமக்கள் 45பேரின் சடலங்கள் மண்டைதீவில் ராணுவத்தால் எரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 30

மண்டைதீவில் பொதுமக்கள் 45 பேரின் சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு இராணுவத்தினரால் நேற்று முன்தினம் (செவ்வாய்) எரிக்கப்பட்டன.

அவ்வாறு எரிக்கப்பட்டவர்களில் எட்டுப் பேரின் பெயர்கள் தெரியவந்துள்ளன. அந்த எண்மரும் வருமாறு:-

செபஸ்தியாம்பிள்ளை (வயது 35), அ. துரை (வயது 25), நீ. சேவியர் (வயது 28), எஸ். ஞானசீலன் (வயது 25), எஸ். பூபால் (வயது 50), ப. அன்ரன் (வயது 45), சின்னட்டியம்மா (வயது 70), ரி. செல்வம் (வயது 30).

கொலையுண்டோரில் பெண்களும் அடங்குகின்றனர். சடலங்களின் மேல் டயர்கள் போடப்பட்டு, பெற்றோல் ஊற்றி அவை எரிக்கப்பட்டன.

இந்தத்தகவல்களை அங்கிருந்து நேற்று வந்தவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

மண்டைதீவில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவே இருக்கும் என கருதப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். [ஒ]

## ★ கோட்டையை நோக்கி முன்னேற முடியவில்லை

### இராணுவத்தினர் தகவல்

கொழும்பு, ஆக. 30

மண்டைதீவில் இருந்து யாழ். கோட்டையை நோக்கி அரசுப்படைச் சிப்பாய்களால் முன்னேற முடியவில்லை. இவ்வாறு கொழும்பில் இராணுவத்தினர் நேற்றுத் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

மண்டைதீவை யாழ். நிலப்பரப்புடன் இணைக்கும் தாம்போதியைக் கடந்து யாழ். கோட்டையை அடைய அரசுப் படைகளால் முடியாதிருப்பதாகவும்—

அங்குலம் அங்குலமாகவே அரசுப்படைகளால் முன்னேற முடிகிறது என்று இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர் என்றும் அந்தச் செய்தி தெரிவித்தது.

இதே வேளை—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பங்கீட்டு அளவு அதிகரிப்பு

பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் மா, சீனி, அரிசியின் அளவு அதிகரிக்கப்பட உள்ளது.

கப்பலில் வந்த உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டு ப. நோ. கூ. சங்கங்கள் மூலமாக முதற் கட்டமாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக வழங்கப்படும்போதே இவற்றின் அளவை அதிகரிக்க நேற்று அரசஅதிபர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவாகியது. (இ-3-ரி)

## செய்திச் சரம்

### தேவாலயத்தில் படையினரின் அலுவலகம்

யாழ்ப்பாணம், ஆக. 30

பீரங்கித் தாக்குதலினால் சேதமடைந்த மண்டை தீவு பேதுருவானவர் தேவாலயத்தின் ஒரு பகுதியில், இராணுவத்தினர் அலுவலகம் ஒன்றை அமைத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை, பிள்ளையார் கோவில் பகுதி, கடற்கரைப்பகுதியிலுள்ள வீடுகள் போன்றவற்றில் படையினர் தங்கியுள்ளனர். [ஒ]

### பேதுருவானவர் ஆலயம் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 30

மண்டைதீவிலுள்ள புனித பேதுருவானவர் ஆலயம் பீரங்கித் தாக்குதலினால் பலத்த சேதமடைந்தது.

ஆலயத்திற்கு சமீபமாகவுள்ள பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன. அப்பகுதியிலுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட ஒரு வீடும் முற்றாகச் சேதமடைந்தது. [ஒ]

### நெல்லியடியில் மேலும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 30

நெல்லியடிச் சந்தையில் நேற்றுமுன்தினம் [செவ்வாய்] நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் படுகாயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவயோதிப மாது ஒருவர் நேற்று மரணமானார்.

கரவெட்டி அத்துளுவைச் சேர்ந்த பூபதி என்பவரே இறந்தவராவார், [ஒ-5]

### யாழ். வந்த ரஞ்சன்

யாழ்ப்பாணம், ஆக. 30

பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்று யாழ். குடாநாட்டுக்கு விமானம் மூலம் வந்து திரும்பினார்.

யாழ்ப்பாணம் – மண்டைதீவுப் பகுதிகளையும் அவர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் விமானத்தில் வந்து பார்வையிட்டுச் சென்றார் எனவும் அறியவந்தது.

### மற்றொருவரும் மரணம்

அச்சுவேலி, ஆக. 30

அச்சுவேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் [செவ்வாய்] நடந்த விமானக் குண்டுவீச்சின் போது அதிர்ச்சியினாலும் ஒருவர் வீதியில்விழுந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கிறிஸ்ரோபர் பிரான்சிஸ் 532613965V, லூட்ஸ் மேரி கொன்சலா 646241200V இலக்கங்கள் கொண்ட அடையாள அட்டைகள் பண்டத்தரிப்பு தெல்லிப்பளை வீதியில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் பண்டத்தரிப்பு Y.M.C.A. இல் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். [14116]

பிரபு லோறன்ஸ் ஜோசப் 682230428V இலக்க அடையாள அட்டை யாழ் மெயின் வீதியில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 10, 1 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [14106[

### தகவல் தரவும்

ஏறாவூர் அரசினர் வைத்தியசாலை பல் வைத்தியர் திருமதி விமலராணி மாலிங்கம் மட்டக்களப்பு தாமரைக் கேணி வீதியில் வசிப்பவர். இவரின் தாயார் காவீனமுற்றுள்ளார் இவர்கள் பற்றிய தகவலை தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி 23, கனகரத்தினம் வீதி, அரியாலைக்கோ தகவல் தரவும். [13928]

# வடக்கு - கிழக்கை இராணுவ நடவடிக்கையால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது

## நாடாளுமன்றத்தில் ஸ்ரீ. ல. சு. க. எம் .பி.

கொழும்பு, ஆக. 30

அரசாங்கத்தினால் அனுப்பப்படும் இராணுவங்களால், வடபகுதி மக்கள் ஒரே தொடர்ச்சியாக நெருக்குதல்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

வடக்கும் - கிழக்கும் இந்த நாட்டின் பகுதிகளாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமெனில், அவற்றை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும். ஆனால் இராணுவ நடவடிக்கையால் அவ்வித கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியாது.

இவ்வாறு ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பியான திரு. லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்கும் விவாதம் சபையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போது பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

நாட்டின் இன்றைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய அரசாங்கம் ஒன்று தேவை. இந்த அரசாங்கத்தினால் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஸ்ரீ. ல. சு. கட்சியின் ஆதரவில்லாமல் அரசினால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது — என்றும் திரு. கிரியெல்ல சொன்னார்.

ஐக்கிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த திரு. அத்தாவுட செனிவிரத்தின பேசுகையில் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதை நாம் - ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று எங்களிடம் கேட்பதை விடுத்து அரசு தனது தீர்வை முன்வைக்க வேண்டும்.

இப்பிரச்சனைக்கு மாகாண சபைகளை ஒரு தீர்வாகக் கொண்டு வந்தீர்கள்; ஆனால் அவற்றுக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை- என்றார்.

திரு மாவை சேனாதிராசா (த. வி. கூ) பேசுகையில் கூறியதாவது:-

சனநாயகம் என்ற போர்வையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ், துப்பாக்கிக் கலாசாரத்தின் கீழேயே இந்த நாடு ஆளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் விமானப் படையினர் கடுந்தாக்குதல் நடத்தி வருகிறார்கள். குண்டுகளை வீசி எமது பகுதி மக்களின் இதயங்களை வெல்ல முடியாது. இந்தத் தாக்குதல்களை நிறுத்தாவிடில் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை உங்களால் காணமுடியாது- என்றார்.

திரு. ரி. டபிள்யூ ராஜரத்தினம் (ஸ்ரீ .ல. சு. க) கூறியதாவது;-

சரியாகச் சிந்தித்து சரியாக பேசி, சரியாகச் செயற்பட வேண்டிய காலம் இது. கடந்த இரண்டரை மாதங்களாக போர் நடந்து கொண்டிருக்கிறது. அதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நிலை எட்டப்பட்டுள்ளதா என்ற கேள்வியை நாமே கேட்டுப்பார்க்க வேண்டும்.

''போருக்குப் பதிலாக எதைச் செய்ய முடியும்?'' என்று பலர் கேட்கிறார்கள். ஆனால் ''பேச்சுவார்த்தைக்குப் பதிலாக வேறு எந்த வழியைக் கடைப்பிடிக்க முடியும்?'' என்று நான் கேட்க விரும்புகிறேன் - என்றார்.

கல்வி அமைச்சர் அத்துலத்முதலி சொன்னதாவது:-

அதிகாரத்தைப் பரவலாக்குவது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் எந்த மட்டத்தில் அதிகாரத்தைப் பரவலாக்குவது என்பதை, கிழக்குமாகாணத்தை என்ன செய்வது என்ற விடயம் தடுத்துவிடுகிறது. அங்கு வாழும் மூன்று இனங்களும் வெவ்வேறு எதிர்பார்ப்புப் பின்னணிகளை உடையனவாக இருக்கின்றன.

தமிழர்கள் வடக்கு கிழக்கைத் தமது தாயகம் என்று வர்ணிக்கிறார்கள். கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தியதால் தமிழரின் பிரதிநிதித்துவம் குறைந்துவிட்டதாக விடுதலைப்புலிகள் சொல்கிறார்கள். இது விடயத்தில் 1921 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பு விபரத்தைச் சபையில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்-

இது. குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே கிராமம் கிராமமாக எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் திருகோணமலையில் சிங்கள மக்கள் மட்டுமே வாழ்ந்த வெவகம்பற்று, பிந்தென்னப்பற்று பன்னம்பற்று ஆகிய கிராமங்கள் குறிப்பிடப்படுகின்றன. அங்செல்லாம் கண்டியவர் திருமண விவாகரத்துச் சட்டம் அருகில் இருந்திருக்கிறது. கிழக்கில் வாழ்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் முஸ்லிம்கள். — என்றார்.

### வெல்ல முடியாது

ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் பேசுகையில் தெரிவித்ததாவது:

இந்தப் போரை நாம் வெல்லப் போவதில்லை. பிரபாகரனைப் பிடித்தால் கூடப் போர் முடியப் போவதில்லை. பிரபாகரனும் புலிகளும் நோயின் அறிகுறிகளே: அறிகுறிகள் மாறலாம் ஆனால் நோய் தொடரும்.

1956 கலவரத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டபோது சிங்களவர்களும், முஸ்லிம்களும் சந்தோஷப்பட்டிருக்கலாம். 1983 இலும் தமிழர்கள்தான் பாதிக்கப்பட்டனர். ஆனால் இன்று மூன்று இனங்களைச் சேர்ந்தவர்களுமே பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

தமிழ் அரசியல் இப்போது இனவாதரீதியிலானது அல்ல. அந்த அரசியல் இப்போது விடுதலையுடன் தன்னை அடையாளம் காட்டுகிறது. முஸ்லிம் அரசியலும் இப்போது அவ்வாறே.

மக்களின் இரத்தத்தின் மீது, மக்களின் வேதனைகள் மீது, அதிகாரத்தைத் தொடர ஒருபோதும் முயற்சிக்கப் போவதில்லை என இறந்தவர்களின் பெயரில் நாம் எல்லோரும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வோ

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பொன்னையா

காரைநகர் களபூமி பாலாவோடையை பிறப்பிடமாக கொண்டவரும் கலேவலை பிரபல வர்த்தகரும் ஆகிய கணபதிப்பிள்ளை பொன்னையா 28-08-90இல் காலமாகி விட்டார்.

இவர் காலம் சென்ற கணபதிப்பிள்ளை பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், சிவபாதசுந்தரம், பாலேந்திரன், காலஞ்சென்ற தனலட்சுமி, புவனேஸ்வரி, சரஸ்வதி, இராஜேஸ்வரி, இராசமலர், சறோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரட்ணம், சரவணப்பெருமாள், செந்தில்நாதன், முருகானந்தம், நல்லம்மாள், இந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை, அன்னமுத்து, சுந்தரம்மா, சரஸ்வதி, கந்தசாமி, தெய்வானை, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலேவலை பிரபலவர்த்தகர் பாலசுப்பிரமணியம், இராமனாதன், மயில்வாகனம், பாக்கியம், செல்லம்மா, தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவதர்சனி, தேவராணி, மேனகா, கேதீஸ்வரன், கனகேஸ்வரன், தங்கேஸ்வரன், அமலேஸ்வரன், பிரபாகரன், சுகந்தினி, கமலனி, அமரதாஸ், சுரேந்திரன், சிவசங்கரி, பரணீதரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று நடைபெற்று தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
**மனைவி, மக்கள்.**

காரைநகர். [14111]

### திருமதி ஜெயமலர் ரட்ணம்

யாழ்ப்பாணம் 5ஆம், குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி ஜெயமலர் ரட்ணம் 27ஆம் திகதி திங்கட்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் அருள் ஞானராஜா ரட்ணம் [ஓய்வு பெற்ற யாழ் ஆஸ்பத்திரிச் செயலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், தயாழினியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. ச. முத்தையா, காலஞ்சென்ற திருமதி த. முத்தையா ஆகியோரின் மகளும், கமலா முத்தையா (சென்னை), டாக்டர் எம். டி. டானியல் (U. S. A.), எம். கருணாகரன் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி எச். டபிள்யூ. ஏ. நத்தானியல், டாக்டர் சி. டி. ஆர். ரட்ணம் அவர்களின் மைத்துனியும் ஆவார்.

கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை பெந்தகோஸ்தே சபையில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று, நல்லடக்கம் வசந்தபுரம் பெந்தகோஸ்தே சபை சேமக்காலையில் நடைபெற்றது.

தகவல்:
**பி. இருதயநாதன்.**

14113

## அந்தியேட்டி அழைப்பிதழும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



பிறப்பு:
02 - 06 - 1967

இறப்பு:
31 - 07 - 1990

திதி:
30—08—1990

### கணேஷ் உதயகுமார் (தவம்)

(கரன் ஸ்ரோஸ் உரிமையாளர்)

உமது பிரிவால் வாடும் குடும்பம் நண்பர் உற்றார், உறவினர் அனைவரும் கண்ணீர் மல்க. உமது அன்பின் வடிவும், செயல், சொல், வீரம் என்றும் எமது நெஞ்சை விட்டகலாது 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியையில் உறவினர் அன்பர்கள் யாவரும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**தந்தை, தாய்.**

டச் வீதி,
மானிப்பாய். [14114]

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானை கணபதிப்பிள்ளை

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி தெய்வானை கணபதிப்பிள்ளை 28 - 08 - 90 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (முள்ளானை) யின் அன்பு மனைவியும், சந்திரன் (பொறியியலாளர்), சற்குணம் (பொறியியலாளர்), சரோஜினி (அவுஸ்திரேலியா), நற்குணன் (பொறியியலாளர்), குணபாலன் (பேபி), உத்தமகுணன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும். நிர்மலா, ஐராங்கனி, பத்மநாதன் (பட்டயக் கணக்காளர், அவுஸ்திரேலியா), அருள்மலர், இந்திராதேவி (போதனாசிரியை யாழ். சர்வோதயம்), பிரேமராணி ஆகியோரது மாமியும் ஆவர்,

அன்னாரது ஈமைக்கிரியைகள் 29 - 08 - 90 புதன்கிழமை நடைபெற்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
**க. குணபாலன்.**

அளவெட்டி வடக்கு [14115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த தீவுப்பகுதி மக்கள் போதிய நிவாரணம் இன்றி கஷ்டம்

திருநெல்வேலி, ஆக. 30

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளினால் ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் மற்றும் பகுதிகளுக்கும் வந்துள்ள ஆயிரக்கணக்கான மக்கள் போதிய நிவாரண உதவிகள் இன்றி கஷ்டப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதும் கச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் இயங்காததுமே இதற்குக் காரணம்.

கிராம சேவை அலுவலகங்கள் தம்மிடம் வரும் அகதிகளிடம் கச்சேரி இயங்கத் தொடங்கிய பின்னர் வரும்படி கூறுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-143]

## ஹமீத் பேச்சுவார்த்தை

கொழும்பு, ஆக. 30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது தொடர்பாக அரசியல் கட்சிப்பிரதிநிதிகளுடன் அமைச்சர் சாகுல் ஹமீத் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் பேச்சுக்கள் நடத்திவருகிறார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு சமாதானக் கமிட்டித் தலைவராகவும் அமைச்சர் சாகுல் ஹமீத் விளங்குகிறார் என்பது தெரிந்ததே. (இ-எ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக. 30

நவாலி, அட்டகிரி அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமானுக்கு இன்று வியாழக்கிழமை நவோத்தர சங்காபிஷேகமும், விசேட பூஜை ஆராதனைகளும் நடைபெறும்.

நாடு நலம் பெறவும், அல்லலுற்று அவதிப்படும் மக்கள் அமைதியும், சுபீட்சமும் பெறவும், மிருத்சங்கிரக ஓமமும், விசேட பிரார்த்தனையும் நிசழ்த்தப்படும். (அ)

## கிளிநொச்சிப் பகுதியில் வழமை நிலை திரும்புகிறது

கிளிநொச்சி, ஆக. 30

பரந்தனில் இருந்து இராணுவம் வெளியேறியதை அடுத்து கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் அமைதியான சூழ்நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரில் ஒரு சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வருகின்றது.

வீதிகளில் மக்களின் நடமாட்டம் அதிகரித்து உள்ளது.

வீடுகளை விட்டு இடம்பெயர்ந்திருந்த மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பவும் வந்து கொண்டிருக்கிறார்கள். (இ - 76)

## இராணுவத்தினர் கதைவிடுகிறார்கள்: மெழுகுதிரி, தீப்பெட்டியில் கண்ணிவெடி தயாரிப்பாம்!

யாழ்ப்பாணம், ஆக, 30

மூன்று மெழுகுதிரிகளையும் ஒரு தீப்பெட்டியையும் கொண்டு ஒரு கண்ணிவெடி தயாரிக்க முடியுமாம்!

இதனைக் கண்டுபிடித்தார்களோ இல்லையோ, இந்த விவரத்தைச் சொல்பவர்கள் மதவாச்சிப் பகுதிகளில் கடமையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர்.

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த பயணிகளிடமே இராணுவத்தினர் இதனைத் தெரிவித்திருக்கின்றனர்.

பயணிகளை மதவாச்சியில் வைத்துக் கடும் சோதனையிட்ட இராணுவத்தினர் அவர்கள் கொண்டு வந்த மெழுகுதிரிகள், தீப்பெட்டிகளைஎல்லாம்முதல் பறிமுதல் செய்தனர். பின்னர் ஒவ்வொரு பிரயாணிகளிடமும் மூன்று மெழுகுதிரிகளையும், ஒரு தீப்பெட்டியையும் கொடுத்தனர். அப்போதே மேற்கூறப்பட்ட கண்ணிவெடிக் கதையைச் சொன்னார்கள்.

இப்படிக் கதைவிட்டு முடிந்ததும், பறிமுதல் செய்த தீப்பெட்டிகளையும், மெழுகுதிரிகளையும் பிரயாணிகள் முன்னிலையிலேயே இராணுவத்தினர் தீயிட்டுக் கொளுத்திவிட்டனர். (அ-3-ரி)

## ஈராக் ராஜதந்திரிகள் வெளியேற்றம்

வாஷிங்டன், ஆக. 30

அமெரிக்காவில் பணிபுரியும் 55 ஈராக்கிய ராஜதந்திரிகளில் 36 பேரை, வாஷிங்டன் அரசாங்கம் நேற்று நாட்டை விட்டு வெளியேற்றியது.

இந்த ராஜதந்திரிகள் ஈராக்கிய தூதரகத்தில் பணியாற்றி வந்தனர்.

குவைத்தில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களை மூடிவிடும்படி ஈராக் அரசு உத்தரவிட்டது தெரிந்ததே.

அதற்குப் பதிலடியாக அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. (இ - எ)

## கொம்படிப் பாதையில் விமான - ஹெலி தாக்குதல்கள்

கிளிநொச்சி, ஆக. 30

இயக்கச்சி, கண்டாவளைப் பகுதிகளை இணைக்கும் கொம்படிப் பாதையில் தினமும் விமான, ஹெலித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பகுதியில் லொறிகள், உழவு இயந்திரங்கள் விமானத் தாக்குதல் காரணமாக முற்றாக எரிந்த நிலையில் காணப்படுகின்றன. (இ - 76)

## முகமூடி அடையாளம் காட்டிய பலர் இன்னும் தடுத்துவைப்பு

அராலி ஆக. 30

ஊர்காவற்றுறையில் இருந்து மண்டைதீவுவரை முன்னேறிய படையினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் பெரும் பகுதியினர் விடுவிக்கப்பட்டுவிட்டனர். முகமூடியினால் அடையாளம் காட்டப்பட்டவர்கள் மட்டுமே இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று அப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தவர்கள் தெரிவித்தனர்.

நன்றாக தமிழ் பேசும் இளைஞர்கள் பலர் படையினருடன் காணப்பட்டனர் என்றும் படையினருக்கு வழிகாட்டிகளாகச் செயற்படுவதுடன் பொதுமக்களைக் கைது செய்வதற்கும் உதவுகிறார்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் பொது மக்களை கைது செய்து அழைத்துச் சென்று வீடியோ படம் எடுத்தனர் என்றும் கூறப்படுகிறது. (இ)

## கிளிநொச்சியில் அரிசி விலை திடீர் அதிகரிப்பு

கிளிநொச்சி, ஆக. 30

கிளிநொச்சியில் அரிசி விலை திடீரென அதிகரித்துள்ளது. இதுவரை கிலோ 17 ரூபா ஆக விற்பனை செய்யப்பட்ட அரிசி தற்போது 23 ரூபா ஆக விற்பனை செய்யப்படுகின்றது.

550 ரூபா ஆக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு மூடை நெல் இப்போது 800 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

சைக்கிள் வியாபாரிகள் மூலம் அதிகளவு அரிசி யாழ். குடாநாட்டுக்கு செல்வதாலேயே அரிசியின் விலை அதிகரித்துள்ளது.

போதியளவு நெல் இருப்பில் இல்லாததால் பல அரிசி ஆலைகள் பூரணமாக இயங்க முடியாத நிலையில் உள்ளன. (இ-76]

## பயிற்சி பெற்ற மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 30

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 1 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். [இ[

## மகோற்சவம்

அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரதநாரயணர் [நாகேஸ்வரம்] ஆலய மகோற்சவம் செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெற இருக்கிறது. [இ-51]

## “கோட்டை மதிற்கல் கொண்டே புதைகுழி அமையுங்கள்”

கோட்டை முகாம் முற்றுகையின்
முக்கிய உதவிப் பிரிவாக
கண்துயிலாது மண்டைதீவில்
காத்துநின்ற நாற்பத்தொன்பது பேர் நாம்
அன்று கோட்டையிலே எங்களை விட்டுச்சென்ற
அந்த இருபத்தியேழுபேரிடம் செல்கின்றோம்.

மண்டைதீவிலே காத்துநின்ற நாட்கள்
எழுபத்தைந்து தான் - இறுதிச்
சண்டைக்காக உங்களிடம் விட்டுச் செல்கின்றோம்
வரும் மீதி நாட்களை
அந்த எழுபத்தைந்து நாட்களும் எம்மைச் சந்தித்த
இரவுகளைக் கூட பகலாக்கித்தான் கழித்தோம்
பார்வைக்கு பாலைவனம்போல் மண்டைதீவு
காட்சியளித்தாலும் - நம்
சேவையின் முன் அவையாவும்
பசும்சோலைகளாகத்தான் காட்சி தந்தன

எதிரியுடன் நாம் புரிந்த இறுதிப் போரிலே
கடற்படையின் பீரங்கிக் குண்டுகள் நம்
கால்களுக்கிடையில் வீழ்ந்ததுண்டு
போர் விமானங்களின் குண்டுகள்
முதுகில்கூட வீழ்ந்ததுண்டு.
எதிரி ஏவிய ஷெல்கள் எம்மத்தியில்
வீழ்ந்து சிதறி எம்மை நிலைகுலைக்க முயன்றன
ஆனாலும் எமது உறுதியான இலட்சியத்திற்காக
இறுதிவரை போரிட்டோம் எமது
மண்ணில் வீழ்ந்தோம்.

எம்முடன் பழகியவர்களுக்கும் எமது
அருமை மக்களுக்கும் சேதி கூறுங்கள்
இந்தக் கோட்டை முகாமை
'' உயிர் '' சுத்தியல் கொண்டு
தகர்க்க முயன்ற எங்களுக்கு
கோட்டை. மதிற்கல் கொண்டே
புதைகுழி அமையுங்கள்.

— அருணன்

## குவைத்திலிருந்து வெளியேறிய வடபகுதித் தமிழர் விவரம்

யாழ்ப்பாணம் ஆக. 30

குவைத்தில் இருந்து வெளியேறி றியாத், செய்ரோ, ஜோர்தான் ஆகிய நாடுகளில் தங்கி உள்ள 68 வடபகுதித் தமிழர்களில் ஒரு பகுதியினரின் பெயர் நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது. இன்று மிகுதி வெளிவருகிறது.

### றியாத்தில் தஞ்சம் புகுந்தோர்

என். பாலசுப்பிரமணியம் (உடுவில் தெற்கு), பி. பத்மராசா (அச்சுவேலி), எம். தர்மராஜா (மானிப்பாய்). வி.பாலகாந்தன் (சங்கானை) பரமேஸ்வரன் (மண்கும்பான்), கே. கிருஷ்ணமூர்த்தி (வதிரி-கரவெட்டி), கே. ஸ்ரீலட்சுமிகாந்தன் (கரவெட்டி) என். செல்வேந்திரன் (அராலி), ஆர். ஜெயக்குமார் (அரியாலை), ஆர். பத்மசீலன் (மட்டுவில்)

எஸ். நற்குணராஜா (ஊர்காவற்றுறை), கே. லட்சுமணன் (வட்டுக்கோட்டை), எஸ். அந்தனி குயின் (நுணாவில்], எம். கிருஷ்ணகுமார் [நல்லூர்], ஏ. ஜெயராஜசிங்கம் [முல்லைத்தீவு], கே. பிரபாகரன் [மானிப்பாய்], ஏ. செல்லத்துரை [சுதுமலை], ரி. முருகமூர்த்தி [வரணி] பி. கந்தையா கிருஷ்ணமூர்த்தி [பொன்னாலை]

### ஜோர்தானில் தஞ்சம் புகுந்தோர்

கே. எம். இரத்தினம் [ஆஸ்பத்திரி வீதி- யாழ்ப்பாணம்] யோகராஜா செந்தில் குமாரன் [வயாவிளான்], வைரவபிள்ளை ஸ்ரீகாந்தன் [சுன்னாகம்], தேவதாஸ் [ஜோன்ஸன் [வயாவிளான்[, சோமுசிவசோதி [உடுப்பிட்டி[, பொன்னுத்துரை புவனேந்திரராஜா [ஆறுகால்மடம்], பாலசிங்கம் ரஞ்சன் [கோண்டாவில்] கந்தன் முருகன் தியாகராஜா [அல்வாய்]. சபாரத்தினம் பரமேஸ்வரன் [அல்வாய்), ஏ. நவரட்ணசிங்கம் தர்மராஜா [உடுவில் தெற்கு], வீரன் கதிர்காமு [கரவெட்டி).

### கெய்ரோவில் தஞ்சம் புகுந்தோர்

இளையதம்பி வேலுப்பிள்ளை சௌந்தருபராஜா [வயாவிளான்], முத்தையா நடராஜா ராஜேஸ்வரன் [வயாவிளான்], செல்லப்பா தவராஜா (உரும்பிராய்).

(முற்றும்)

## பரீட்சை முடிவு இன்னும் இல்லை

கிளிநொச்சி மாவட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் ஒரு மாதம் கழிந்தும் இன்னும் கிளிநொச்சி வந்து சேரவில்லை. [இ-76]

## வடக்கு...

(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

மாக.

இனப்பிரச்சனையைத்தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் கூட்டு அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். அங்கு தமிழ்மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு தீர்வொன்றைக் காணவேண்டும். வடக்கு-கிழக்கில்வாழும் முஸ்லீம்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாமலும் எந்தத் தீர்வையும் காணமுடியாது.

மாகாணசபை என்றால் என்ன, பிரதேச சபை என்றால் என்ன தமிழ் முதலமைச்சரின் கீழ் இனி முஸ்லீம்களால் வாழவே முடியாது. தமிழர்களைப் போல, முஸ்லிம்களுக்கும் தனியான அதிகாரப் பரவலாக்கல் பிரிவு வழங்கப்பட வேண்டும்- என்று கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியஸ்த பேச்சுக்களை தொடங்க

# குஜ்ராலை இலங்கைக்கு அனுப்புக!

## ராஜ்யசபாவில் வற்புறுத்து

புதுடில்லி, ஆக. 30

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் நடக்கும் யுத்தத்தை நிறுத்தி தமிழரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு —

வெளியுறவு அமைச்சர் திரு. இந்தர்குமார் குஜ்ரால் உடனடியாக இலங்கை சென்று மத்தியஸ்த பேச்சுக்களைத் தொடங்க வேண்டும்.

இவ்வாறு நேற்று இந்திய ராஜ்ய சபையில் வலியுறுத்தப்பட்டது.

ஈழத்தமிழர்கள் படும் அவலங்கள், அவதிகள் குறித்து நேற்று அங்கு நடந்த விசேட விவாதத்தின் போது எம். பிக்கள் பலரும் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

தமிழர்களின் நிலையை நேரில் அறிந்து கொள்ள இந்திய எம். பிக்கள் குழு ஒன்றை அனுப்ப வேண்டும் என்றும் மத்திய அரசை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழக எம். பி. திரு. வை. கோபாலசாமி விவாதத்தை தொடக்கி வைத்துப் பேசினார்.

தமிழ் நாட்டில்உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பத்திரமாக தாயகம் திரும்புவதற்குரிய நிலையை இலங்கையில் தோற்றுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. வை. கோபாலசாமிகேட்டுக்கொண்டார்.

இலங்கையில் இருந்து அமைதிப்படையை மத்திய அரசு அவசரப்பட்டு விலக்கிக் கொண்டுவிட்டது என்று இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் குற்றஞ் சாட்டினர்.

இலங்கை பற்றிய முந்திய அரசின் கொள்கையைக் குலைத்து விட்ட தேசியமுன்னணி அரசு, இந்தப் பிரச்சினையில் தெளிவான கொள்கையை இன்னமும் வகுக்கவில்லை என்றும் அவர்கள் குறைகூறினர்.

இலங்கைத் தமிழர் படும் அவதிகள் குறித்து கவலை தெரிவித்த எம். பிக்கள்—

பேச்சுக்கள் மூலம் தீர்வு காண மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்—வற்புறுத்தினர்.

தமிழர் பகுதிகளில் கண்மூடித்தனமாக குண்டு வீசித் தாக்குவது நிறுத்தப்பட்டு, தமிழரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும்- வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் உடனடியாக இலங்கை செல்ல வேண்டும் என்றும்-

இந்திய எம். பிக்கள் குழு ஒன்றை உடனே இலங்கைக்கு அனுப்பி தமிழர் நிலையை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் பல எம். பி. க்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டனர். [அ-எ]

## காயமடைந்த அத்தியட்சகர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஆக. 30

முல்லைத்தீவில் இரணைப்பாலப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பொம்மர் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த முல்லைத்தீவுமாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. ஏ. குணரத்தினம் (வயது 54) மரணமானார்.

பொம்மர் தாக்குதலினால் இவரது வலது காலுக்கு கீழேயுள்ள பகுதி ஆஸ்பத்திரியில் வைத்து அகற்றப்பட்டிருந்தது தெரிந்ததே. [ஒ-5]

### மற்றொருவம்..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மரணமானார்.

ஆழ்வார் துரையர்[வயது-52] என்பவரே இறந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. [ஒ-11]

### முல்லைத்தீவு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை—

விடுதலைப் புலிகளின் முற்றுகையை இராணுவம் முறியடிக்கும் என்றும்—

இன்றும் நாளையும் ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்தி முல்லைத்தீவு இராணுவ முகாமில் படுகாயமடைந்திருக்கும் 42 படையினரையும் மீட்போம் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### கோட்டையை....

தாம்போதியில் உள்ள ஒரு பாலத்தை விடுதலைப் புலிப் போராளிகள் வெடி வைத்துத் தகர்த்துவிட்டனர் என்றும்—

இது தவிர பாதையின் இரு மருங்கிலும் கண்ணி வெடிகள் போராளிகளால் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும்— அந்தச்செய்தி மேலும் விவரம் வெளியிட்டது.

இதே வேளை—

இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று கடந்த திங்கள் மாலை யாழ். கோட்டை முகாமினுள் இறங்கி காயமடைந்த படையினரை மீட்டுச் சென்றது.

யாழ். கோட்டையை அரசுப் படைகள் மீண்டும்பிடிக்க இன்னும் காலம் எடுக்கும் என்பதைத்தான் காட்டுகிறது என்று பி. பி. சி. தனது விமர்சனத்தில் கருத்துத் தெரிவித்தது. [அ-எ]

### படையினரின்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டன.

இதேவேளை—

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மேலும் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும்—

44 படையினர் காயமடைந்தனர் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் 30 முதல் 40 படையினர் கொல்லப்பட்டனர் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. (ஒ-?)

## கழுத்தில் தாலியுடன் மண்டைதீவில் சிப்பாய்கள்!

யாழ்ப்பாணம், ஆக. 30

மண்டைதீவில் இப்போது நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கழுத்து நிறையச் சங்கிலி, விரல்கள் நிறைய மோதிரம் என்பவற்றுடன் காணப்படுகின்றனராம்.

இதில் குறிப்பிடக்கூடிய ஒன்று என்னவெனில் பல சிப்பாய்கள் தாலிக்கொடிகளையும் (அதன் மகிமைதெரியாது) அணிந்திருக்கிறார்கள் என்பதாகும். இராணுவத்தினர் அல்லைப்பிட்டியிலிருந்து முன்னேறி மண்டைதீவை அடைந்தவுடன் அங்குள்ள பல வீடுகளில் நகை, பணம் போன்றவற்றை கொள்ளையிட்டுச் சென்றதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

சில இடங்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நகைகள் 'டிடெக்டர்' மூலம் கண்டுபிடிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. [ஒ]

## அகதியாக வந்த கர்ப்பிணி ஆஸ்பத்திரியில் மரணம்

### சிகிச்சை அளிக்க டாக்டர் இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 30

கர்ப்பிணி ஒருவருக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க மகப்பேற்று டாக்டர் எவரும் கடமையில் இல்லாததால், மானிப்பாயில் இயங்கும் போதனா வைத்தியசாலையில் அவர் மரணமானார்.

திருகோணமலையில் இருந்து அகதியாக வந்து பண்டத்தரிப்பில் தங்கியிருந்த வசந்தி என்னும் கர்ப்பிணித் தாயே இவ்வாறு இறந்தவர் ஆவார்.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மகப்பேற்றுப் பிரிவிலும் டாக்டர்கள் கடமை புரிவது வழக்கம் என்றும், ஆனால் தற்போதைய நிலையில் போதிய பாதுகாப்பு இல்லாததால் மகப்பேற்று வைத்தியர்கள் இரவில் கடமைக்கு வருவது மிகக் குறைவு எனவும் அறிய வருகிறது.

இறந்த பெண் ஏற்கனவே சத்திர சிகிச்சை மூலமே மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது (ஒ-5-3)

## வானிலிருந்து பத்திரிகையும் விநியோகம்

யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் அதன் சுற்றாடல்களிலும் ''அவ்ரோ'' விமானம் ஒன்று நேற்று மாலை ஏரிக்கரைப் பத்திரிகைகளைக் கட்டுக் கட்டாகப் போட்டது.

தினகரன் பத்திரிகையின் 28 ஆம் திகதி இதழ்களும் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையின் 29 ஆம் திகதி இதழ்களுமே குண்டுகளுக்குப் பதிலாக விமானத்திலிருந்து நேற்றுவிநியோகிக்கப்பட்டன

# மரண அறிவித்தல்கள்

## சந்தியாப்பிள்ளை தம்பித்துரை

**(தேவராஜன்)**

(டாவின் அன்ட் கொம்பனி முகாமையாளர், கொழும்பு)

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியைப் புகலிடமாகவும், கொண்ட திரு. தம்பித்துரை அவர்கள் 20 - 08 - 90 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சத்தியவிமலாதேவியின் (விடுதி மேற்பார்வையாளர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திரு, சந்தியாப்பிள்ளை. திருமதி பாக்கியம் சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. சின்னப்பு, திருமதி பொன்னம்மா சின்னப்பு ஆகியோரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி, குணரத்தினம் (சிமெந்துக் கூ. தாபனம் கே. கே. எஸ்.), செல்வராசா சிமெந்துக் கூ தாபனம் கே. கே. எஸ்.), அழகரத்தினம், சுந்தரம், (மகாதேவா) புலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சிவபாதம், திருமதி குகனேஸ்வரன், காலஞ்சென்ற சத்தியேஸ்வரன், பிரேமநாதன் (கிளை முகாமையாளர் கூ. ச. அச்சுவேலி), அபூர்வசூரியா (ஜேர்மனி) திரு. குமார், சிவபாக்கியம், திலகவதி, வசந்தகுமாரி, பாக்கியலீலா (ஆசிரியை), தனலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 - 08 - 90 இல் கொழும்பில் கனத்தை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**திருமதி சத்தியவிமலாதேவி தம்பித்துரை.**

''திருத்தணிகை''
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. [14112]

## அப்புத்துரை குணரட்ணம்

(D. S. Postal Department, Mullaitivu)

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்புத்துரை குணரட்ணம் 28-08-90 அன்று அகால மரணம் எய்தினார். அன்னார் பத்மராணியின் அன்புக் கணவரும், திருக்குமரன், வாசுகி, தேவகி, சுதர்சன், சரதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னையா துரைசாமி தம்பதிகளின் (Rtd. D. S. Postal Dpt.) மருமகனும், திருமதி சிவசுப்பிரமணியம் தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [30-8-90] வியாழக்கிழமை காலை புலோலியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**எஸ். வீரகத்திப்பிள்ளை**

புலோலி. (14118)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னமுத்து சபாரெத்தினம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கு நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னமுத்து சபாரெத்தினம் அவர்கள் 29 8-90இல் காலமானார், அன்னார் காலஞ்சென்ற சபாரெத்தினம் (வயலின் ஆசிரியர் - செல்லப்பா சுவாமிகளின் மருமகன்) அவர்களின் அன்பு மனைவியும்; திரு. கனகசபாபதி (ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர், நீர்ப்பாசன இலாகா), திரு. கனகரெத்தினம் (முன்னாள் காசாளர் யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி யோகாம்பிகை கனகசபாபதி, திருமதி மகாலெட்சுமி கனகரெத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 29-8-90 நல்லூர் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.

தகவல்:

**ச. கனகசபாபதி, ச. கனகரெத்தினம்**
(மகன்மார்)

258, பருத்தித்துறைவீதி,
நல்லூர். (13929)

## கதிரவேலு [தம்பு] இராஜேஸ்வரி

[தபாற் கந்தோர், யாழ்ப்பாணம்]

வண். மேற்கு, 89, காரைக்காட்டு ஒழுங்கையைச் சேர்ந்த கதிரவேலு இராஜேஸ்வரி காலமானார். இவர் கதிரவேலுவின் அன்பு மனைவியும், நாகபாலா, சிவபாலா, சுதர்ஜனா ஆகியோரின் அன்புத் தாயாரும், எஸ். எஸ். இராஜேந்திரன், எஸ். எஸ். மாதவன், கமலா, திலகம் ஆகியோரின் சகோதரியும் —

காலஞ்சென்ற நடராஜா, இராசலெட்சுமி (கனடா) ஆனந்தராசா, காலஞ்சென்ற பாலரெத்தினம் மகாலெட்சுமி, சந்திரசேகரன் பாக்கியராசா ஆகியோரின் மைத்துனியும், வரதராசா கோவிந்தராசா, இரத்தினராசா (ஹொலண்ட்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்கு 30-08-90 வியாழன் காலை 10 00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**எஸ். எஸ். இராஜேந்திரன்**

89, காரைக்காட்டு ஒழுங்கை,
வண். மேற்கு, யாழ்ப்பாணம். (13930)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org